2011 பிப்ரவரி 7]

நிச்சயமாக அது கடைப்பிடிக்கப்படும் என்று நான் உங்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன்.

கல் குவாரிகளைப் பொறுத்தமட்டிலே; அவர்கள் சொன்னார்கள், மூலக் கேள்விக்கேகூட அதுதான் அடிப்படையான காரணம். மாண்புமிகு உறுப்பினர் சாமி அவர்கள் எழுப்பியிருக்கக்கூடிய மூலக் கேள்விக்கும் அதுதான் காரணமாக இருந்திருக்கிறது. அது ஒரு protected monument என்று வரையறுக்கப்பட்ட இடம். அது protected monument. அங்கே எந்தவிதமான கட்டடப் பணிகளோ அல்லது வேறு பணிகளோ செய்ய முடியாது. அங்கிருந்து 100 மீட்டர் தொலைவிற்கு எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், அது prohibited area என்று சொல்கிறார்கள். அங்கேயும் கட்டுமானப் பணிகளைச் செய்ய முடியாது. அந்த 100 மீட்டர் எல்லையிலேயிருந்து 200 மீட்டர் தொலைவிற்கு regulated area என்று வரையறுத்திருக்கிறோம். அங்கே அவர்கள் கட்டுமானப் பணிகளைச் செய்வதாக இருந்தால், அதைத் தடுப்பதற்கு முடியவில்லை. எனவே, சட்டங்களைப் பொறுத்தமட்டில், தொல்லியல் துறையினுடைய சட்டங்கள் ஒருமாதிரியாக இருக்கின்றன; Mining Department-இலே ஒரு மாதிரியாக இருக்கிறது. இதுகுறித்து கலந்து பேசுவதற்கு தலைமைச் செயலாளர் அளவிலே ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, ஓர் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து ஆய்வுகள் வந்ததற்குப் பிறகு, அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இதற்கு ஒரு தீர்வு காணப்படும் என்று நம்புகிறேன். இதற்கு நடுவிலே நீதிமன்றத் தீர்ப்புகளின் அடிப்படையிலே ஆங்காங்கே குவாரிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு உட்பட்டதாக இருக்கின்றன.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

15—

தார்ச் சாலை

*107206—திருமதி ஜி. லதா:

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 7

(அ) குடியாத்தம் தொகுதி, முதலியார் ஏரியிலிருந்து காட்பாடி தொகுதி, டி.ஆர். குப்பம் வரை வனத் துறைப் பகுதியில் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, முதலியார் ஏரி முதல், காட்பாடி தொகுதி, டி.ஆர். குப்பம் வரை வனத் துறையின் சார்பாக தார்ச் சாலை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலியார் ஏரியிலிருந்து டி.ஆர். குப்பம் வரை இணைப்புச் சாலையாக 4 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலை அமைக்க வேண்டுமென்று பலமுறை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. முதலியார் ஏரியிலிருந்து குடியாத்தம் கே.வி. குப்பம் செல்ல வேண்டுமென்றால், ஏறத்தாழ 40 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வரவேண்டிய நிலை இருக்கிறது. இன்னொரு பகுதியில் மருத்துவ வசதி பெறுவதற்கோ, பள்ளி செல்வதற்கோ முடியாமல், மாணவர்களும் பொதுமக்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். 40 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வருகின்ற அந்த நிலையைத் தவிர்த்து, நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்கு இணைப்புச் சாலை போடப்பட்டால் போக்குவரத்திற்கும் அது உதவியாக இருக்கும்; செலவினத்தையும் குறைப்பதற்கு சிறந்த வழிவகுக்கும்.

அதேபோல, குடியாத்தம் தொகுதி, ஆந்திராவை ஒட்டியிருக்கின்ற, அந்த மாநிலத்தை இணைக்கின்ற தொகுதியாக இருக்கின்றது. ஆந்திரா மலைப் பகுதியில் இருக்கின்ற பகுதிகளுக்குச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆந்திரா மலை வரையில் சாலைகள் போடப்பட்டுவிட்டதால், குடியாத்தம் பகுதியில் சைனகுண்டா பந்தலத்தொட்டி பகுதியில், வனப் பகுதியில் ஏறத்தாழ ¼ கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை அமைத்துக் கொடுத்தால்கூட, அது ஓரளவிற்குப் போக்குவரத்திற்கு உதவிகரமாக இருக்கும். அந்த நிலையிலிருந்துதான் வனத் துறை வேலூர் மாவட்டம் முழுமையும்,

TAMIL NADU LEGISLATURE ASSEMBLY

2011 பிப்ரவரி 7]

குடியாத்தம் பகுதியில் இதுநாள் வரையில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்தும்கூட. . .

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் 'ஆம்' என்று தானே சொல்லியிருக்கிறார், இதிலே ஏன் இவ்வளவு நேரம் பேசுகிறீர்கள்? கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திருமதி ஜி. லதா: அமைச்சர் 'ஆம்' என்று சொல்லவில்லை. இயலாது என்ற நிலையைத்தான் சொல்லியிருக்கிறார். அவசியம் மக்களின் சூழ்நிலைகளை உணர்ந்து பள்ளி மாணவர்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், விவசாயிகளின் நலன் கருதி அந்த 4 கிலோ மீட்டர் போடுகின்ற அந்தச் சாலையை அமைத்துத் தர ஆவன செய்தால் மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். இரண்டு மாநிலங்களையும் இணைக்கின்ற அந்தப் பகுதியில், வனத் துறையைச் சார்ந்த பகுதிகளில் அவசியம் அந்தச் சாலைகளை அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலை 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அதிலே 2.4 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கள்ளப்பாடி, அந்த வனப் பகுதியின் காப்புக்காட்டின் ஊடே செல்கிறது. அதில் அனுமதிக்கப்பட்ட வழித் தடம் இல்லை. ஒற்றையடிப் பாதை மட்டும்தான் இருக்கிறது. வனப் பகுதியிலே சாலை அமைக்க வேண்டுமென்றால் மத்திய அரசினுடைய 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, மத்திய அரசினுடைய அனுமதி பெறவேண்டும். வனத் துறையின் பயன்பாட்டிலேயுள்ள அந்த இடத்திலே சாலை அமைக்க முடியாது. மற்ற சாலைகளை அமைக்க வேண்டுமென்று விரும்பினால், உள்ளாட்சித் துறையோ அல்லது நெடுஞ்சாலைத் துறையோ அதற்கான கருத்துருவை அனுப்பி, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தேவையான அந்த formalities–ஐ அவர்கள் observe செய்து அனுப்பினால், அதை மத்திய அரசுக்கு அனுப்பி, அனுமதி பெற்று, அங்கு சாலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

[2011 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை அமைச்சர் அறிவுறுத்தலின்படி, ஏற்கெனவே வனத் துறை அதிகாரிகள் அந்தப் பகுதியில் சென்று, பார்வையிட்டு, அளந்து சென்றிருக்கிறார்கள். ஆனால், மக்கள் பயன்பாட்டில் அதைச் சாலையாகவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 100 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதி பயன்பாட்டிலேயே இருக்கிறது. எந்த மரத்தையும், செடிகளையும், கொடிகளையும் வெட்ட வேண்டிய அவசியமே இல்லை. அந்த நிலையில் இருந்துதான், ஏற்கெனவே சாலையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற அந்தச் சாலையை மீண்டும் தார்ச் சாலையாக அமைப்பதற்கு வனத் துறையினர் ஆவன செய்ய வேண்டும் என்றும், ஆந்திர மாநிலத்தை இணைக்கின்ற பந்தலத்தொட்டி சாலை இரண்டு கிலோ மீட்டர், அதில் வனத் துறையின் பகுதி ¼ கிலோ மீட்டர்தான் வரும். இரண்டு மாநிலங்களையும் இணைக்கின்ற அந்தப் பகுதிகளை இணைப்புச் சாலையாக அமைத்து பந்தலத்தொட்டி சாலையை அமைச்சர் அமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சாலை அமைக்கப்படும் என்றுதான் குறிப்பிடுகிறேன். அதற்கான கருத்துருவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அவர்கள் அனுப்பி வைப்பார்களேயானால்—அதை மத்திய அரசுக்கு நாமாக அனுப்பக் கூடாது; ஏனென்று, கேட்டால் நில உரிமையாளர்கள் மத்திய அரசு; மாநில அரசு பாதுகாவலர்கள்தான்; எனவே—அதை மத்திய அரசுக்கு அனுப்பி, அனுமதி பெற்று அமைக்கப்படும் என்றுதான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். சாலை அமைக்கப்பட மாட்டாது என்று நான் குறிப்பிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகரிலிருந்து தெங்குமரஹடா செல்லும் மண் சாலையைத் தார்ச் சாலையாக அமைத்துத் தர மாண்புமிகு வனத்

VAIMAYE VELLUM / TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 7]

துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புவதோடு, மாயாற்றின் குறுக்கே கல்லாற்றின் அருகில் ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்ற அந்த மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையைச் சமீபத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கு முன்னுரிமை வழங்கி, அந்தப் பாலத்தை முழுவதுமாக அமைத்துக் கொடுத்தால் அங்கு செல்லும் பேருந்துகளுக்கும், பொது மக்களுக்கும் பயனாக இருக்கும். 27 கிலோ மீட்டர் வனத் துறையின்மூலம் சாலை அமைப்பதற்கு நாளானாலும், அந்தப் பாலத்தை அமைக்க அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்துவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிடுகின்ற பாலம், ஈரோடு மாவட்டத்தையும், நீலகிரி மாவட்டத்தையும் இணைக்கின்ற ஒரு பகுதியாகும். நான் நேரில் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டிருக்கிறேன். இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் அதைப் பார்த்து, அதற்கான கருத்துருவை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படிக் கருத்துரு வந்தால், அதன் பிறகு அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். குருசாமி.

திரு. எஸ்.எஸ். குருசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதிக்குட்பட்ட பர்கூர் மலைப் பகுதியில் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பாக வந்து அங்கே வனச் சாலைகளை ஆய்வு செய்தார்கள். குறிப்பாக வட்டக்காடு, காக்காயனூர், பர்கூர் சாலை, சுண்டப்பூர், கற்கைகண்டி, வேலம்பட்டி ஆகிய பகுதிகளில் அங்கே பள்ளிகள் இருக்கிறபடியால் மாணவர்களும், ஆசிரியர்களும் செல்வது மிகவும் சிரமமாக இருக்கிறபடியினாலே அந்தச் சாலையைத் துரிதமாகத் தார்ச் சாலையாக அமைக்க வேண்டும் என்று சொல்லி அமைச்சர் அவர்களும் ஆணையிட்டார்கள். ஆனால், இதுவரையில் அது நடைபெறாமல் இருக்கின்றது. ஆகவே, துரிதமாக நடவடிக்கை எடுக்க

TRUTH ALONE TRIUMPHS

அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் வனத் துறையிலுள்ள சாலைகளெல்லாம் முடிந்த அளவுக்கு மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. கடந்த ஆட்சியில், ஐந்தாண்டுக் காலத்தில் 120 கிலோ மீட்டர் சாலைகள்தான் மேம்படுத்தப்பட்டன. ஆனால், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளிலே 430 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டில் 50 கிலோ மீட்டருக்கு சாலைகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வரும் ஆண்டிலே அந்தப் பணிகளெல்லாம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்ட சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுத் தலைவர் என்ற பொறுப்பில் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுக் கூட்டங்கள் மேற்கொள்ளப்பட்டபோது வலியுறுத்தப்பட்ட மிக முக்கியமான பிரச்சினை, வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் புதிதாகச் சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதைவிட, ஏற்கெனவே உள்ள சாலைகளை மேம்பாடு செய்வதற்கு வனத் துறையால் பராமரிக்கப்பட இயலாத நிலை உள்ளது. சுற்றுலாத் துறை நிதியின்மூலம், நெடுஞ்சாலைத் துறை அப்பகுதியிலுள்ள வனச் செல்வங்களுக்கு எவ்வித இடையூறும், இடர்பாடுகளும் ஏற்படாத வகையில், செயலாக்கம் செய்வதற்கு ஏற்கெனவே உள்ள வனத் துறையின் விதிகள் தடையாக இருப்பதால், சில சாலைகளை மேம்பாடு செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டும் டெண்டர் கோரப்பட்டும் மிகப் பெரிய பிரச்சினைகளுக்கு ஆளாகியிருக்கின்றது.

2011 பிப்ரவரி 7]

குறிப்பாக, சுற்றுலாச் சாலைகள், ஒகேனக்கல் செல்லக்கூடிய, நாட்டார்பாளையம் செல்லும் சாலையைப் பொறுத்தவரையில், நீண்ட நாட்களாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல் கேள்விக்குப் பதில் அளித்ததைப்போல, அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, இந்தச் சாலை மிக அவசியம் என்று சொல்லப்பட்டும்கூட இதுவரையில் பரிசீலிக்கப்படாமல் இருக்கின்றது. ஆனால், நெடுஞ்சாலைத் துறையின்மூலம் நிதி ஒதுக்கப்பட்டு, பணி தடைபட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையின்மூலம் ஒதுக்கப்பட்ட நிதியைத் தங்களுக்குத் தர வேண்டுமென்று வனத் துறை கேட்பதும், நெடுஞ்சாலைத் துறை தர மறுப்பதும் மாநில அளவில் இருக்கக்கூடிய பல்வேறு மலை சார்ந்த மாவட்டங்களில் இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக சாலைகள் மேம்பாடு செய்வதற்கான முயற்சிகளில், மத்திய அரசாங்கத்தால் 1984 ஆம் ஆண்டு போடப்பட்ட வனப் பாதுகாப்புச் சட்டம் இடையூறாக இருந்தாலும்கூட, இருக்கக்கூடிய சாலைகளை மேம்பாடு செய்துகொள்வதற்கு, தங்களுடைய துறையின்மூலம் நிதியை ஒதுக்கியாவது மேம்பாடு செய்ய வேண்டும். சட்டம் என்பது மக்களுக்காகத்தானே தவிர, சட்டத்திற்காக மக்கள் அல்ல என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். அதை மாண்புமிகு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: இந்தப் பிரச்சினையில், விதித் தளர்வு செய்து, இருக்கக்கூடிய சாலைகளை மேம்பாடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பல இடங்களிலே மற்ற துறைகளாலே சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், சரணாலயப் பகுதிகளிலே வனத் துறைதான் அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியும். காரணம், வன விலங்குகளின் நடமாட்டம் அதிகம். அங்கு மற்றவர்கள்

சென்றால், அதாவது உள்ளாட்சித் துறையோ அல்லது நெடுஞ்சாலைத் துறையோ சென்றால், அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்காது. ஆனால் எங்கள் துறையைச் சார்ந்தவர்கள் சென்றால், அவர்கள் அதற்குத் தேவையான ஆயுதங்களெல்லாம் வைத்திருப்பார்கள். அதுமட்டுமல்லாமல், சரணாலயப் பகுதிகளில் யாரையும் எளிதாக அனுமதித்துவிட முடியாது. அந்தக் காரணத்தினாலேதான், சில இடங்களிலே தடைகள் இருக்கலாமேயொழிய—மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—பல இடங்களிலே நாங்கள் அனுமதி வழங்கியிருக்கிறோம். நீலகிரி மாவட்டத்திலேகூட அனுமதி வழங்கியிருக்கிறோம்.

அதேபோல, உள்ளாட்சித் துறையின் சார்பாக, திருவண்ணாமலை, ஜமுனாமரத்தூர் சாலைகளிலெல்லாம் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. சில இடங்களில் சரணாலயம் என்ற காரணத்தாலேதான் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. தமிழகத்திலே வனத் துறையின் சார்பாக 3,323 கிலோ மீட்டர் சாலைகள் இருக்கின்றன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் அந்தப் பணிகளெல்லாம் முடிந்த அளவுக்கு, ஆண்டுக்கு ஐந்து கோடி, ஆறு கோடி ரூபாய்தான் நிதி கிடைக்கும். அதை வைத்து எங்கெங்கு சாலைகள் மோசமாக இருக்கின்றனவோ அந்தச் சாலைகளையெல்லாம் சீரமைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன்.

திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், கரந்தமலை பகுதியிலுள்ள மலையூர், சின்னமலையூர் மற்றும் வலசை கிராமங்களுக்கும், கெங்கவாடி மலைப் பகுதியிலுள்ள ஏழுமலையூர் பகுதிக்கும் மலைப் பகுதி, Reserve forest பகுதி, அந்த வனப் பகுதியைக் கடந்து கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையைக் கருதி, அந்தக் கிராமங்களுக்குப் புதிய சாலை அமைப்பதற்கான கருத்துரு அனுப்பப்பட்டு, மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல மாவட்ட ஆட்சித் தலைவரும் பரிந்துரை செய்து, அரசுக்கு அனுப்பியிருக்கிறார். ஆனால், அதற்குப் பின்பும் அதில்

2011 பிப்ரவரி 7]

இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்போது அந்த மூன்று கிராமங்களுக்கும் மாவட்ட நிருவாகம் அனுமதித்து பரிந்துரை செய்திருக்கின்ற அந்தச் சாலை அமைக்கப்படுமா? இப்போது அந்தச் சாலைகளினுடைய நிலை என்ன? மேலும், இதுபோன்று திண்டுக்கல் ஒன்றியம், சிறுமலைப் பகுதியிலும், மலைப் பகுதியை கடந்து, Reserve forest பகுதிகளைக் கடந்து பல கிராமங்களுக்குச் சாலைகளை அமைக்கின்ற பணிகளுக்கு மாவட்ட நிருவாகத்தின்மூலம் பரிந்துரைக்கப்பட்டு, மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டுவிட்டன. ஆனாலும்கூட, அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. அந்தச் சாலைகள் அமைக்கப்படுமா; அவற்றின் இன்றைய நிலை என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, வனப் பகுதிகளை, பிற பணிகளுக்கு எடுத்துக்கொள்வதிலே மத்திய அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது. பள்ளிக் கட்டடம், மருத்துவமனைகள் அல்லது குடிநீர்க் குழாய்கள் மற்றும் குடிநீர்த் தொட்டிகள் அமைப்பது போன்ற பணிகளுக்கு விரைவாக அவர்கள் அதற்கான அனுமதியைத் தருகிறார்கள். ஆனால், சாலை அமைப்பதில் அவர்கள் மிகவும் காலதாமதம் செய்கிறார்கள். சாலைகள் அமைப்பது வனப் பகுதிகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் என்று மத்திய அரசு கருதுகிறது. எனவே, அது தேவை என்றால்தான் அதற்கான அனுமதியை விரைவாகத் தருகிறார்கள். நாங்கள் கருத்துருக்கள் பெறப்பட்டவுடன் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து விடுகிறோம். அவர்கள் பரிசீலித்து அதற்கான அனுமதியைத் தருகிறார்கள். ஒரு ஹெக்டேர் வரை இருந்தால் தமிழக அரசே அதற்கான அனுமதியை வழங்கிவிடலாம். ஒரு ஹெக்டேரிலிருந்து ஐந்து ஹெக்டேர் வரை என்றால் மத்திய அரசினுடைய அதற்கான அலுவலகம் பெங்களூருவில் இருக்கிறது. அவர்கள் அதற்கான அனுமதியினைத் தருகிறார்கள். ஐந்து ஹெக்டேருக்கு மேல் இருந்தால் மத்திய அரசின் டெல்லி அலுவலகத்திற்குக் கோப்புகள் சென்று வர வேண்டும். எனவே, அதில் கால தாமதம் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதி, 5 ஹெக்டேருக்கு மேல் இருக்கும். அதனால்தான் மத்திய அரசுக்கு அனுப்பி

வைத்திருக்கிறோம். அதுகுறித்து விரைவான அனுமதியைப் பெறுவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது வனத் துறையில் இருக்கும் சாலைகளை அமைப்பதற்கான அனுமதியை உடனடியாக வழங்குகிறோம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே பொதுமக்கள் பயன்பாட்டில் இருக்கின்ற நெடுஞ்சாலைத் துறையினுடைய சாலைகளாக இருந்தாலும், அல்லது ஒன்றியச் சாலைகளாக இருந்தாலும், அல்லது கிராமச் சாலைகளாக இருந்தாலும், அந்தச் சாலைகளை அவர்களே அந்தக் குறிப்பிட்ட இடங்களில் எந்த அனுமதியும் இல்லாமல் உடனடியாக செய்துகொள்வதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.300 கோடி திட்டத்திலே, சிங்கப்பெருமாள்கோவில்–ஒரகடம்–ஸ்ரீபெரும்புதூர் சாலையை மேம்படுத்துவதற்கான அறிவிப்பை அறிவித்து, அந்தப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால், அந்தப் பகுதியிலே 4 கிலோ மீட்டர் நீளத்திற்கு வனத் துறைக்குச் சொந்தமான சாலை இருக்கிறது. அந்தச் சாலையை இதுவரையிலே போட முடியவில்லை. மழைக் காலத்திலே ஏறக்குறைய மூன்று மாத காலம் ஸ்ரீபெரும்புதூர்–செங்கல்பட்டு சாலையிலே பேருந்துகளே இயக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. அதற்கு நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினுடைய அதிகாரிகளைக் கேட்டபோது, அந்தச் சாலையைத் தற்காலிகமாகப் புனரமைப்பதற்குக்கூட எங்களுக்கு அனுமதியை வனத் துறை கொடுக்கவில்லை என்ற காரணத்தைச் சொல்லி, அதன் பிறகு படாதபாடுபட்டு, அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்திருக்கிறோம். இப்போது அந்தச் சாலையைச் செம்மைப்படுத்தியிருக்கிறார்கள். எனவே, அவ்வாறு அகலப்படுத்துகின்ற சாலைகளுக்கு, உடனடியாக அனுமதியும், ஏற்கெனவே, தமிழகம் முழுவதும் நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரகத் துறையிலே பயன்படுத்துகிற அந்தச் சாலைகளை எந்த அனுமதியுமின்றி, அவர்களே வரைபடத்திலே இருக்கின்ற அந்த நீள அகலத்திற்கு ஏற்றார்போல சாலைகளைப் புதுப்பித்துகொள்வதற்கு எந்தத் தடையுமில்லை என்றும் அரசு அறிவிக்குமா என்று தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

2011 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுப்படுத்துகின்ற பணிகளுக்குப் பல இடங்களிலே உடனடியாக அனுமதியைப் பெற்று, அந்தச் சாலைகள் எல்லாம் தங்குதடையின்றி வனப் பகுதியிலேகூட அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலையின் சீரமைப்புப் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டு அது சீரமைக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி அகலப்படுத்துவதற்கான அந்தப் பணிக்குக் கருத்துரு அனுப்பப்பட்டிருந்தால், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல நாங்கள் நினைத்தால் நாங்களே அனுமதியைக் கொடுத்துவிட முடியாது. அதை உரிய அதிகாரிகளிடம் அனுப்பி, அதாவது அது மத்திய அரசின் பெங்களூரு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுமோ அல்லது மத்திய அரசின் டெல்லி அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுமா என்று அறிந்து அனுப்பி அதற்கான அனுமதியை நாங்கள் பெற்றுத் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

16—

அகலப் பாதை

***10183—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு–ஆரணியை இணைக்கும் ஒருவழிப் பாதையை அகலப் பாதையாக மாற்றும் பணியினைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?